மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊடுபயிராகக் கோகோவைப் பயிர் செய்யலாம் என்று ஆலோசனை இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு என். நன்மாறன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

கால்வாய்ப் பணி

***61—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டம், பதினெட்டாம் கால்வாய்த் திட்டப் பணியை விரைவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆம். பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. 67 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மார்ச் 2007–க்குள் எஞ்சியுள்ள பணிகளை முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. என். நன்மாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் இந்தப் பதினெட்டாம் கால்வாய்த் திட்டம் குறித்து, நான் அங்கு செல்கிறபோது, அந்த மாவட்டத்திலுள்ள விவசாயிகளும், எங்களுடைய தோழர்களும் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். அதையொட்டி எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கிறேன். மீதம் இருக்கிற 33 சதவிகிதப் பணியையும் வருகிற மார்ச் மாதத்திற்குள் நிறைவு செய்கிறோம் என்று தெரிவித்ததற்கு மீண்டும் நன்றிகூறி, இதன்மீது தொடர் கவனம் எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.*

2007 ஜனவரி 23]

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் சென்னையில் நடைபெற்ற ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களின் பாராட்டு விழாவிலே அரசியலும், ஆன்மீகமும் இணை பாதிகளாக இருந்ததைக் கண்டு நான் பெருமைப்பட்டேன். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய வணக்கத்திற்குரிய முதல்வர் அவர்களும் மிகச் சிறப்பாக அந்த விழாவிலே பங்கேற்றுச் சிறப்பு செய்தார்கள். அதிலே கூறப்பட்ட ஒரு செய்தியை நான் இங்கே கூற விரும்புகின்றேன். தமிழகத்தினுடைய எல்லை வரை ஸ்ரீ சத்ய சாய் பாபா அறக்கட்டளை மூலமாகக் கால்வாய் சீரமைக்கப்பட்டிருக்கிறது என்றும், பிறகு தமிழகத்தினுடைய எல்லையிலே இருந்து பூண்டிவரை அமைப்பதற்கு, சென்ற அரசு இணக்கம் அளிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். அதைச் செய்வதற்கு ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்கள் தனிப்பட்ட முறையிலோ அல்லது வேறு ஒரு வகையிலோ உறுதி அளித்திருக்கின்றார்களா? அப்படிப்பட்ட அதே நிலையினைத் தமிழக எல்லையிலே நிறுவுவதற்கு, கட்டமைப்பு செய்வதற்கு, அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கிறதா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம்; அவ்வளவுதான். அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறோம். ஃது சட்டமன்றமல்ல, உறுப்பினர் கேள்வி கேட்டவுடனே பதில் சொல்வதற்கு. கோரிக்கை வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

திருமதி ராணி வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னடியன் கால்வாயிலுள்ள வெள்ள நீரை, சாத்தான்குளத்திற்குக் கொண்டுவர 198 கோடி ரூபாயில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதனால் நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைவார்கள். இத்திட்டம், இந்த நிதியாண்டிலேயே தொடங்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் தாமிரபரணி ஆற்றுப் பகுதியில்

அதிகமான நீர், வீணாகக் கடலிலே கலக்கிறது. அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பது எல்லோருடைய நீண்டநாள் கோரிக்கை. அதை ஆய்வு செய்தபோது, வெள்ளான்குடி வரையிலே அந்தத் தண்ணீரை எடுத்துப் போக முடியும் என்பதற்காக, கன்னடியன் கால்வாய்மூலம் தண்ணீரை எடுத்துச் செல்வதற்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. கன்னடியன் கால்வாயிலே ஆரம்பத்திலிருந்து 6.5 கிலோமீட்டர் வரையில் 450 கன அடி தண்ணீரைத்தான் இப்பொழுது எடுத்துச் செல்ல முடியும். அதை 3,680 கன அடி கொள்ளளவுள்ள கால்வாயாக அந்தப் பகுதிக்கு மாற்ற வேண்டும். பிறகு அங்கிருந்து வெள்ளான்குடி வரையிலே ஒரு கால்வாய் வெட்டி எடுத்துச் செல்ல வேண்டும். அப்படி எடுத்துச் செல்கிறபோது, நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் தாலுகாவிலுள்ள வறண்ட பகுதிகள் பயனடையும். 2,765 மில்லியன் கன அடி தண்ணீர் இந்தத் திட்டத்தின்மூலம் எடுத்துச்செல்லலாம். சுமார் 37 கிராமங்கள் பயனடையலாம். 4,770 கிணறுகள் உயிரோட்டம் பெறும். 19,710 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்தத் திட்டத்தினுடைய economic beneficiary ratio மிகவும் நன்றாக இருக்கின்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை அரசு ஏற்று, நபார்டு வங்கியின்மூலம் உதவி பெறுவதற்கு எல்லாவிதமான ஆக்கப் பணிகளும் முடிந்து, நபார்டு பணிக்கு அனுப்புகின்ற பரிசீலனையில் மட்டும் இறுதியில் இருக்கிறது. விரைவில் நபார்டு வங்கியினுடைய உதவியோடு இந்தத் திட்டம் நிறைவேற அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

14—

பேருந்து வசதி

***408—திரு. சி. கோவிந்தசாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரில் மகளிருக்கான தனிப் பேருந்துகள் மற்றும் அடுக்குமாடிப் பேருந்துகள் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,